# மூன்றாம் நபர் வருகை வரம்பு என்றால் என்ன?

மூன்றாம் நபர் வருகை வரம்பு (TPVL) என்பது சூதாட்டக் கூடங்களுக்குச் செல்வோரில் நிதிப் பிரச்சினைகளால் எளிதில் பாதிப்படையக்கூடிய அபாயம் உள்ள தனிநபர்களைப் பாதுகாக்க, சூதாட்டப் பிரச்சினைகளுக்கான தேசிய மன்றம் (NCPG) அறிமுகப்படுத்திய சமூகப் பாதுகாப்பு நடவடிக்கையாகும். தொடர்ந்து சூதாட்டக்கூடங்களுக்குச் செல்லும் ஒருவர், சூதாட்டத்திற்கு அடிமையாவதோடு, நிதிப் பிரச்சினைகளிலும் சிக்கிக்கொள்ளலாம்.

நீங்கள் உள்ளூர் சூதாட்டக்கூடங்களுக்குச் செல்லும் சிங்கப்பூரர் அல்லது நிரந்தரவாசியாக இருந்தால், உங்களின் நிதி நிலவரம் பற்றி மதிப்பீடு செய்ய, சூதாட்டப் பிரச்சினைகளுக்கான தேசிய மன்றம் உங்களுக்கு ஒரு கடிதம் அனுப்பக்கூடும்.  நிதி ரீதியாக எளிதில் பாதிப்படையக்கூடியவர்கள் அல்லது மோசமான கடன் பிரச்சினைகளைக் கொண்டிருப்பவர்கள் எனக் கண்டறியப்படும் தனிநபர்களுக்கு, மூன்றாம் நபர் வருகை வரம்பு பிறப்பிக்கப்படலாம்.

**மேலும் மோசமான சூழல்களில், மூன்றாம் நபர் விலக்கு உத்தரவு பிறப்பிக்கப்படலாம்.**

## ? அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

**நான் எவ்வாறு எனது நிதி நிலைமையைத் தெரிவிப்பது?**
- https://icis-services.ncpg.org.sg என்ற இணையப்பக்கத்தில், சிங்பாஸ் வழி
- சூதாட்டப் பிரச்சினைக்கான தேசிய மன்றத்தை **6354 8154** என்ற எண்ணில் அழைத்து சந்திப்புக்குப் பதிவுசெய்துகொள்ளுங்கள்

உங்கள் நிதி நிலைமையைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டு, நீங்கள் அவ்வாறு செய்யத் தவறினால், சூதாட்டப் பிரச்சினைகளுக்கான தேசிய மன்றத்தின் கைவசமுள்ள தகவல்களின் அடிப்படையில், வருகை வரம்பு அல்லது விலக்கு உத்தரவு முன்மொழியப்படும்.

**நான் ஏன் எனது நிதி ஆவணங்களை சூதாட்டப் பிரச்சினைக்கான தேசிய மன்றத்திடம் கொடுக்கவேண்டும்?**
சூதாட்டப் பிரச்சினைக்கான தேசிய மன்றம், உங்கள் நிதி நிலைமையைப் பாரபட்சமற்ற முறையிலும் முழுமையாகவும் மதிப்பீடு செய்ய, அந்த நிதி ஆவணங்கள் துணைபுரியும்.

**நான் எந்த நிதி ஆவணங்களைச் சமர்ப்பிக்கவேண்டும்?**
சிங்கப்பூர் உள்நாட்டு வருவாய் ஆணையத்தின் (IRAS) ஆக அண்மைய மதிப்பீட்டு அறிக்கை, கடன் அறிக்கைகள், வங்கி அறிக்கைகள், மத்திய சேமநிதி அறிக்கை போன்ற சம்பந்தப்பட்ட ஆவணங்கள்.  சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் இரகசியமாக வைத்திருக்கப்படும்.  மூன்றாம் நபர் வருகை வரம்பு திட்டத்தின்கீழ், உங்கள் நிதி நிலைமையை மதிப்பிடும் நோக்கத்திற்காக மட்டுமே அவை பயன்படுத்தப்படும்.

நீங்கள் இணையம்வழியாகச் சமர்ப்பிக்கும்போது, உங்கள் நிதி ஆவணங்களைப் பார்வையிட, MyInfo மூலம் எங்களுக்கு அனுமதி வழங்கலாம்.

*எல்லா தகவல்களும் இரகசியமாக வைத்துக்கொள்ளப்படும்.*



## வளங்கள்

**எங்கள் அலுவலக முகவரி:**
சூதாட்டப் பிரச்சினைக்கான தேசிய மன்றம்
510 தாம்சன் சாலை, #05-01, SLF கட்டடம்,
சிங்கப்பூர் 298135

**அலுவலகம் செயல்படும் நேரம்:**
திங்கள் முதல் வியாழன் வரை:
காலை 8.30 மணி - மாலை 6.00 மணி
வெள்ளி: காலை 8.30 மணி - மாலை 5.30 மணி
வாரயிறுதி நாட்களிலும் பொது விடுமுறை நாட்களிலும் அலுவலகம் மூடப்பட்டிருக்கும்

**மேல் விவரங்களுக்கும், முன்பதிவுகளுக்கும்:**
தொலைபேசி: 6354 8154
மின்னஞ்சல்: admin@ncpg.org.sg

**நான் எங்கே உதவி நாடலாம்?**
அன்றாடம் காலை 8 மணி முதல் இரவு 11 மணி வரை, 1800-6-668-668 என்ற எண்ணில், சூதாட்டப் பிரச்சினைக்கான தேசிய தொலைபேசி உதவி சேவையை அழைக்கலாம் அல்லது www.ncpg.org.sg என்ற இணையத்தளத்தை நாடலாம்.

NCPG.Singapore   @ncpg.singapore   www.ncpg.org.sg

NCPG
NATIONAL COUNCIL ON PROBLEM GAMBLING

# மூன்றாம் நபர் வருகை வரம்பு பற்றி மேலும் தெரிந்துகொள்ளுங்கள்



# மூன்றாம் நபர் வருகை வரம்பு / விலக்கு உத்தரவு செயல்முறை




START

## 1 அறிவிப்புக் கடிதம்

நீங்கள் சூதாட்டக்கூடங்களுக்குச் செல்வதை, சூதாட்டப் பிரச்சினைக்கான தேசிய மன்றம் கவனித்துள்ளதால், இந்தக் கடிதத்தைப் பெறுகிறீர்கள்.



## 2 ஆவணங்களைச் சமர்ப்பித்தல்

தயவுசெய்து, உங்கள் நிதி நிலவரம் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பிக்கவும். உங்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டுமா என்பதை சூதாட்டப் பிரச்சினைக்கான தேசிய மன்றம் பாரபட்சமின்றி தீர்மானிக்கும்.

## 3 பரிசீலனைக் குழுவின் (CoA) மறுபரிசீலனை

பரிசீலனைக் குழு, நீங்கள் வழங்கிய தகவல்களை மறுஆய்வு செய்து, வருகை வரம்பு அல்லது விலக்கு உத்தரவு உங்களுக்குப் பயனளிக்குமா என்பதைத் தீர்மானிக்கும். அடுத்து, கடிதம் வழி, உங்களுக்கு உத்தரவு பிறக்கப்படுவது தொடர்பில் தகவல் தெரிவிக்கப்படும்.



## 4 பரிந்துரைக்கப்படும் உத்தரவு

பரிந்துரைக்கப்படும் உத்தரவை, நீங்கள்

- ✔ **ஏற்கலாம்**
- ✘ **எதிர்க்கலாம்**

நீங்கள் எதிர்க்காவிட்டால், 14 நாட்களுக்குப் பிறகு, அதனை உறுதிப்படுத்தும் ஆணையைப் பெறுவீர்கள்.

**அல்லது**

## எந்த உத்தரவும் இல்லை*

பரிசீலனைக் குழு உங்களுக்கு எந்த உத்தரவும் பிறப்பிக்காது. மேற்படி, எதுவும் செய்ய வேண்டியதில்லை.




## 5 பரிந்துரைக்கப்படும் உத்தரவுக்கு மறுப்பு தெரிவித்தல்[1]

நீங்கள் ஆட்சேபிக்க விரும்பினால், உங்கள் விண்ணப்பத்தை ஆதரிக்கும் நிதி ஆவணங்களுடன் ஒரு விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கலாம்.

## 6 பரிசீலனைக் குழுவின் மறுபரிசீலனை

பரிசீலனைக் குழு, உங்கள் விண்ணப்பத்தைப் பரிசீலித்து முடிவெடுக்கும். பின்னர், அக்குழுவின் முடிவைத் தெரிவிக்கும் கடிதத்தை (உறுதிப்படுத்தப்பட்ட உத்தரவு), நீங்கள் பெறுவீர்கள். ஏற்புடையதாக இருப்பின், ஆலோசனைக்கான பரிந்துரைக் கடிதமும் அனுப்பி வைக்கப்படும்.

## 7 உறுதிப்படுத்தப்பட்ட உத்தரவு

உறுதிப்படுத்தப்பட்ட உத்தரவை நீங்கள் ஏற்க மறுத்தால், உத்தரவில் குறிப்பிடப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள், நீங்கள் மேல்முறையீடு செய்யலாம்.

**அல்லது**

**உத்தரவு இல்லை ***



## 8 உறுதிப்படுத்தப்பட்ட உத்தரவுக்கு எதிரான மேம்முறையீடு [1]



நீங்கள் மேல்முறையீடு செய்ய விரும்பினால், உத்தரவில் குறிப்பிடப்பட்ட 30 நாட்களுக்குள் அதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்கலாம்.

## 9 சூதாட்டப் பிரச்சினைக்கான தேசிய மன்ற உறுப்பினர்களின் மறுபரிசீலனை

வழங்கப்பட்ட தகவல்கள் மன்றத்தால் மறுபரிசீலனை செய்யப்படும். உத்தரவானது உங்களுக்குப் பலனளிக்குமா அல்லது ரத்து செய்யப்படவேண்டுமா என்பது தீர்மானிக்கப்படும். மன்றத்தின் முடிவை நீங்கள் ஒரு கடிதத்தின் மூலம் பெறுவீர்கள்.

## 10 உத்தரவு நீடித்தல் அல்லது மாறுதல்

உறுதிப்படுத்தப்பட்ட அல்லது மாற்றப்பட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னர், உங்கள் நிதி நிலைமை மாறியிருந்தால், உத்தரவை ரத்து செய்ய / மாற்ற நீங்கள் சூதாட்டப் பிரச்சினைக்கான தேசிய மன்றத்தைத் தொடர்புகொண்டு விண்ணப்பிக்கலாம்.

**அல்லது**

**உத்தரவு இல்லை ***

## 11 உத்தரவு ரத்து / மாற்றம்

உங்கள் ஆணையை ரத்து செய்ய அல்லது மாற்ற, **6354 8154** என்ற எண்ணில் சூதாட்டப் பிரச்சினைக்கான தேசிய மன்றத்தைத் தொடர்புகொண்டு, சந்திப்புக்கு ஏற்பாடு செய்யவும். நாங்கள் நியமித்திருக்கும் அமைப்பிடம் பரிசீலனைக்கான நீங்கள் பரிந்துரைக்கப்படுவீர்கள். தேவையிருப்பின், நீங்கள் ஆலோசனை பெறவும் பரிந்துரைக்கப்படுவீர்கள்.

அனைத்து செலவுகளையும் சூதாட்டப் பிரச்சினைக்கான தேசிய மன்றம் ஏற்றுக்கொள்ளும்.

*குறிப்பு: நீங்கள் ஒரு விசாரணையில் கலந்துகொள்ள வேண்டியிருக்கலாம்*



## 12 சூதாட்டப் பிரச்சினைக்கான தேசிய மன்ற உறுப்பினர்களின் மறுபரிசீலனை

சூதாட்டப் பிரச்சனைக்கான தேசிய மன்ற உறுப்பினர்கள், வழங்கப்பட்ட தகவல்களை மறுபரிசீலனை செய்து, உத்தரவானது உங்களுக்குப் பயனளிக்குமா அல்லது ரத்து செய்யப்படவேண்டுமா என்பதைத் தீர்மானிப்பார்கள். மன்றத்தின் முடிவு குறித்து, நீங்கள் ஒரு கடிதத்தைப் பெறுவீர்கள்.



## 13 உத்தரவு நீடித்தல் அல்லது மாறுதல்

**அல்லது**

**உத்தரவு ரத்து**




*மேல்விவரங்களைப் பெற, சூதாட்டப் பிரச்சினைக்கான தேசிய மன்ற அலுவலகத்தில் நேர்காணல் ஒன்று நடத்தப்படலாம்.*

*[1] நீங்கள், தேவையான விண்ணப்பத்தைக் கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கலாம்:*
*1) உங்கள் சிங்பாஸைப் பயன்படுத்தி NCPG இணையத்தளத்தில் சமர்ப்பிக்கவும்*
*2) சந்திப்புக்கு ஏற்பாடு செய்ய **6354 8154** என்ற எண்ணை அழைக்கவும்*

** நீங்கள் தொடர்ந்து சூதாட்டக்கூடங்களுக்குச் சென்றால், முன்னதாக எவ்வித உத்தரவும் உங்களுக்குப் பிறப்பிக்கப்படவில்லை என்றாலும் கூட, உங்களது நிதி நிலைமையைப் பரிசீலிக்க, சூதாட்டப் பிரச்சினைக்கான தேசிய மன்றம், உங்களை வருங்காலத்தில் தொடர்புகொள்ளலாம் என்பதை தயவுசெய்து நினைவில் கொள்க.*

# உங்கள் வருகை வரம்பைக் கணக்கிடுதல்

**1 வருகை = 1 சூதாட்டக்கூடத்தில் 24 மணி நேரம்** [ஒரு குறிப்பிட்ட நாளில், முதன்முதலில் நுழைந்த நேரத்திலிருந்து]

உதாரணம்: திருவாட்டி இங்-கிற்கு விதிக்கப்பட்ட மூன்றாம் நபர் வருகை வரம்பின்படி, அவர் **ஒரு மாதத்தில் 2 முறை மட்டுமே சூதாட்டக்கூடங்களுக்குச் செல்லமுடியும்.** அவர் **24 மணி நேரத்தில்**, அதே சூதாட்டக்கூடத்திற்குள் எத்தனை முறை நுழைந்தாலும், அவர் அன்றாடத் தீர்வை அல்லது ஆண்டுத் தீர்வை செலுத்தினாலும், அவர் 2 முறை மட்டுமே அங்கு செல்லமுடியும்.

*குறிப்பு: உங்கள் மூன்றாம் நபர் வருகை வரம்பை மீறுவதைத் தவிர்க்க, உங்கள் வருகைகளைச் சொந்தமாகக் கண்காணிக்க அறிவுறுத்தப்படுகிறீர்கள்.*

## வருகை வரம்பின் சூழ்நிலைகள்:

**குறி விளக்கம்:**

- வருகை பயன்படுத்தப்பட்டது
- வருகை மீதமுள்ளது
- → மணிக்கு நுழைதல்
- ← மணிக்கு வெளியேறுதல்
- சூதாட்டக்கூடம் A
- சூதாட்டக்கூடம் B




1 *இந்த வருகை **மே 1ஆம் தேதி, காலை 9.00 மணிக்குத்** தொடங்கி, **மே 2ஆம் தேதி, காலை 8.59 மணிக்குக்** காலாவதியாகிறது. 2ஆவது வருகை **மே 2ஆம் தேதி, காலை 9.00 மணிக்குத் தொடங்கி, மே 3ஆம் தேதி, காலை 8.59 மணிக்குக்** காலாவதியாகும்.*




2 *இந்த வருகை **மே 31ஆம் தேதி இரவு 10.00 மணிக்குத் தொடங்கி, ஜூன் 1ஆம் தேதி, இரவு 9.59 மணிக்குக்** காலாவதியாகிறது. ஜூன் மாத வருகை, **ஜூன் 1ஆம் தேதி, இரவு 10.00 மணிக்குத் தொடங்கி, ஜூன் 2ஆம் தேதி இரவு 9.59 மணிக்குக்** காலாவதியாகும்.*




3 *ஒருவர் வேறொரு சூதாட்டக்கூடத்திற்குள் நுழையும்போது ஒரு வருகை பயன்படுத்தப்படுகிறது. எனவே, திருவாட்டி இங் ஒரே நாளில் இரண்டு சூதாட்டக்கூடங்களுக்குள் நுழைந்ததால், அவர் 2 வருகை வரம்புகளைப் பயன்படுத்தியிருப்பார்.*




4 *சூதாட்டக்கூடம் A-க்கான 2வது வருகை, **மே 31ஆம் தேதி, பிற்பகல் 1.59 மணிக்குக்** காலாவதியாகி இருக்கும். சூதாட்டக்கூடம் B-க்கான 3வது வருகை, வருகை வரம்பை மீறியதாகவும் குற்றமாகவும் கருதப்படுகிறது.*